பொது நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் : 01/2026

எனது இலக்கம் : EST-2/05/POL/0087-I

பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2026.04.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

# அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மீதும், அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் மீதும் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அதன் பிரகாரம், அரச சேவை அல்லது மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கு மற்றைய அரசகரும மொழியில் பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சித் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிப்பதுடன் தொடர்புடையதாக 2025.05.26 ஆந் திகதிய 18/2020(II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம், 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.4 பந்தியை அடுத்து உள்ளடக்கப்பட்டுள்ள பந்தி 2.5 இன் பிரகாரம், 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 2.1 இல் காட்டப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக, க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தியுடன் 18/2020 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பந்தி 2.1 இல் காட்டப்பட்டுள்ள வகுதிகளுக்கான நேரொத்த மட்டத்திற்கு அமைய, அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற வாய்மூலப் பரீட்சைக்குத் தோற்றி, அதில் சித்தியடைவதன் மூலம் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பம் கிட்டுகின்றது.

03. அச்சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடையதாக நடாத்தப்படுகின்ற வாய்மூலப் பரீட்சையை கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால்,

அது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு/ தெளிவூட்டுமாறு அறியத் தருகின்றேன்.

**04. மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை**

04.1 எழுத்துமூலத் தகைமையாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கு, மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

04.2 வாய்மூலப் பரீட்சையானது, செவிமடுத்தல் திறன் மதிப்பீடு, பேச்சுத் திறன் மதிப்பீடு என்றவாறு 02 பகுதிகளைக் கொண்டது. இங்கு செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே பேச்சுத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். வாய்மூலப் பரீட்சையில் சித்தியடைவதற்கு, இப் பகுதிகள் இரண்டிலும் தனித்தனியாக 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**05. பரீட்சைக்கு விண்ணப்பித்தல்**

05.1 அரசகரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக மட்டுமே இவ் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன், வருடத்தின் எந்தவொரு நாளிலும் இதற்கான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். இவ் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோருவதற்காக வர்த்தமானியில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது.

05.2 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள், தமக்குரிய சேவை மட்டத்திற்காக விதிக்கப்பட்ட மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்திற்கு மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

05.3 இவ் வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில், மேற்படி எழுத்துமூல தகுதியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழை, செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

05.4 அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தினுள் பிரவேசித்து கேட்கப்பட்டுள்ள விடயங்களுக்கு விண்ணப்பதாரிகள் செல்லுபடியான தரவுகளை உட்சேர்த்தல் வேண்டும் என்பதுடன், மாற்றுத்திறன் விண்ணப்பதாரியொருவர் எனில், அது தொடர்பான விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஆங்கில

மொழியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், ஆங்கில மொழியிலேயே விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

05.5 வாய்மூலப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரும் பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும். அந்தந்த மட்டத்திற்குரிய பரீட்சைக் கட்டணங்கள் வருமாறு:

| **10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை மட்டம்** | **சம்பந்தப்பட்ட வகுதி** | **மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை மட்டம்** | **கட்டணம் (ரூ.)** |
|---|---|---|---|
| மூன்றாம் நிலை/ சிரேஷ்ட மட்டம் | 1 | மட்டம் I | ரூ. 2,000.00 |
| இரண்டாம் நிலை மட்டம் | 2 | மட்டம் II | ரூ. 1,500.00 |
| ஆரம்ப மட்டம் | 3 | மட்டம் III | ரூ. 1,000.00 |

05.6 பரீட்சைக் கட்டணத்தை, நாட்டின் எந்தவோர் இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும், இராஜகிரிய, இலங்கை வங்கிக் கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற "அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தின் 7041541 என்ற கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும் என்பதுடன், வங்கிக்கு பணம் செலுத்தும் படிவத்தில் (Cash deposit slip) பண வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரிக்கு மேலதிகமாக, வைப்பாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு "Oral Exam" எனவும் குறிப்பிடுதல் வேண்டும். பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டில் கணினி மூலம் அச்சிடப்பட்ட இலக்கத்தையும் (நான்கு பிரிவுகளைக் கொண்ட) திகதியையும், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் உரிய கூண்டினுள் குறிப்பிடுதல் வேண்டும்.

05.7 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டை செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் போது கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது.

## 06. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான நிபந்தனைகள்

06.1 இப்பரீட்சை ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவைகள் நடாத்தப்படும். எனினும், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், அதிலும் கூடிய தடவைகள் பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அத்துடன், பரீட்சை நடைபெறும் திகதிகள் சம்பந்தமாக அந்தந்த பரீட்சை நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

06.2 அனைத்து மட்டங்களுக்குமுரிய செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைகள், இராஜகிரிய, கோட்டே வீதி, இல. 341/7 இல் அமைந்துள்ள அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மாத்திரமே நடாத்தப்படும். பேச்சுத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சைக்குரிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, மாவட்ட/ மாகாண மட்டத்தில் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தில் பேச்சுத்திறன் மதிப்பீட்டுப் பரீட்சைகள் நடாத்தப்படும்.

06.3 பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதியட்டையொன்றை விநியோகிப்பதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதாகக் கருதப்படக் கூடாது.

06.4 பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அடையாளத்தை உறுதிப்படுத்துவதுடன் தொடர்புடைய மேற்படி ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

06.5 பரீட்சைப் பெறுபேறுகள் அந்தந்த பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்படும். இப் பரீட்சைப் பெறுபேறுகள் மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது என்பதுடன், பரீட்சையை நடாத்துதல், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் உட்பட வாய்மூலப் பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்தும், அவ்விடயங்களுக்கு மேலதிகமாக எழுகின்ற

எந்தவொரு விடயம் குறித்தும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தைச் சாரும்.

06.6 பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச் சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில், அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்பட பரீட்சார்த்திக்கு நேரிடும்.

07. இச் சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் 011-2888929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தைத் தொடர்புகொள்ள முடியும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 011-2693886
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ad-2-est@pubad.gov.lk